LOLC GENERAL INSURANCE

**வரையறுக்கப்பட்ட LOLC ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பனி** (ஒரு LOLC குழும கம்பனி)
கம்பனி பதிவு இலக்கம்: PB 3807

பதிவுபெற்ற அலுவலகம் : இல. 100/1 ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மாவத்தை, ராஜகிரிய, ஸ்ரீலங்கா.
வணிக அலுவலகம் : இல. 440, ஹெவலொக் வீதி, கொழும்பு - 06, ஸ்ரீலங்கா.
தொலைபேசி: (011) 55 00 880 தொலைநகல்: (011) 2 55 94 07
மின்னஞ்சல் : enquiry@lolcgeneral.com இணையத்தளம்: www.lolcgeneral.com

முக்கிய கவனத்திற்கு..

இது உங்கள் காப்புறுதி பூட்கையின் ஒரு மொழிபெயர்ப்பாகும். இம்மொழிபெயர்ப்பு தொடர்பில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது பிணக்குகள் தோன்றும் சந்தர்ப்பத்தில், குறித்த பூட்கையின் ஆங்கில பதிப்பே மேலோங்கும்.

# உங்கள் காப்புறுதி ஒப்பந்தம்

இக்கையேடானது உங்கள் காப்புறுதி பூட்கை தொடர்பான அனைத்து விபரங்களையும் வழங்கும் காப்பீட்டுப் பத்திரமாகும்.

இக்காப்புறுதி ஒப்பந்தமானது பின்வருவனவற்றினால் உருவாக்கப்பட்டுள்ளது:

- ☐ மோட்டார் முன்மொழிவுப்படிவம்
- ☐ இக்காப்புறுதிக் கையேடு.
- ☐ மோட்டார் காப்புறுதிச் சான்றிதழ்.
- ☐ அட்டவணை.

இக்காப்புறுதிப் பத்திரமானது உங்களுக்கும் டுழுடுஊ இன்ஷுரன்ஸ் கம்பனிக்கும் இடையிலான ஒப்பந்தத்தினைக் காட்டும் சான்றாகும். உங்கள் பாதுகாப்பிற்காக இப்பத்திரத்தினை கவனமாக வாசிக்கவும். இதில் ஏதேனும் தவறுகள் கண்டறியப்பட்டால் அல்லது இக்காப்புறுதிப் பூட்கையின் கீழ் வழங்கப்படும் காப்பீடானது உங்கள் தேவைப்பாடுகளுடன் ∴ குறிப்பிட்ட தேவைகளுடன் இணங்காதவிடத்து, திருந்தங்களை மேற்கொள்ளும் பொருட்டு காப்புறுதிப் பூட்கையானது உடனடியாக கம்பனிக்கு மீள வழங்கப்படல் வேண்டும்.

# முக்கிய குறிப்புகள்

1. ***இழப்பு அல்லது சேதத்திநின்றும் பாதுகாப்பது உங்கள் கடமையாகும்.***

   எல்லா நேரங்களிலும் நட்டம் அல்லது சேதத்தினின்றும் உங்கள் வாகனத்தினை பாதுகாப்பதற்கான நியாயமான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பது உங்கள் பொறுப்பாகும். நீங்கள் உங்கள் வாகனத்தினை எப்போதும் வீதியில் செலுத்தக்கூடிய நிலையில் பேணுதல் வேண்டும்.

2. ***காப்புறுதி நிபந்தனைகளுடன் இணங்கிச் செயற்படுவது உங்கள் கடமையாகும்.***

இக்காப்புறுதியின் கீழ் வழங்கப்படும் காப்பீட்டினது விதிமுறைகள், ஏற்பாடுகள், நிபந்தனைகள், உட்பிரிவுகள், கட்டுறுத்துக்கள் மற்றும் மேற்குறிப்புகள் என்பவற்றினைக் கவனித்து அவற்றை பூர்த்தி செய்வது உங்கள் மீது பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

3. ***உங்கள் காப்புறுதியினை புதுப்பித்து வைத்திருத்தல்***

சூழ்நிலைகளில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுமிடத்து அதனை உடனடியாக அறியத்தருதல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுமிடத்து, உங்களால் கோரப்பட முடியுமான தொகையானது பாதிப்புறலாம் அல்லது உங்களால் கோரல் எதனையும் மேற்கொள்ள முடியாதும் போகலாம்.

சூழ்நிலைகள் கணிசமான அளவில் வேறுப்படுமிடத்து உங்கள் காப்புறுதியானது வரிதானதாக அறிவிக்கப்படவும் சந்தர்ப்பமுண்டு.

சூழ்நிலைகளில் ஏற்படும் ஏதேனும் மாற்றங்கள் எனப்படுவது ,காப்புறுதி உடன்படிக்கைக்கு அடிப்படையான முன்மொழிவுப் படிவத்தில் நீங்கள் ஏற்கனவே குறிப்பிட்ட தகவல்களில் ஏற்படும் ஏதேனும் மாற்றங்களாகும்.

# உள்ளடக்கங்கள்


காப்புறுதி உடன்படிக்கை
காப்பீட்டின் பரப்பெல்லை

பிரிவு 1 - வாகனத்தின் மீதான இழப்பு அல்லது சேதம்
கோரல் வெகுமதி இல்லை
பிரிவு 2 - மூன்றாம் நபர்களுக்கான சட்டமுறை பொறுப்பு
தனியார் கார்கள்
மோட்டார் சைக்கிள்கள்
ஏனைய எல்லா வாகனங்கள்
பிரிவு 3 - மருத்துவ செலவுகள் (தனியார் கார்கள் மட்டும்)
குறிப்பிட்ட விதிமுறைகளின் தவிர்ப்பு அல்லது மீட்கத்தக்க உரிமை
பொதுவான விலக்களிப்புக்கள் (அனைத்து வாகனங்களுக்கும் பொருந்தும்)
நிபந்தனைகள்
நடுத்தீர்ப்பு
உட்பிரிவுகள் மற்றும் மேற்குறிப்புகள்:

உட்பிரிவு 1 - மூன்றாம் நபர் மாத்திரம்
உட்பிரிவு 2 - மூன்றாம் நபர் தீ மற்றும் திருட்டு
உட்பிரிவு 3 - வெள்ளம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள்
உட்பிரிவு 4 - வேலைநிறுத்தம், கலகம் மற்றும் உள்நாட்டு குழப்பநிலை
உட்பிரிவு 5 - பயங்கரவாதம்
உட்பிரிவு 6 - தொழிலாளர் நட்டஈடு
உட்பிரிவு 7 - தொழிலாளர் நட்டஈடு- பயங்கரவாத காப்பீடு
உட்பிரிவு 8 - இழுத்துச் செல்லல் கட்டணங்கள்
உட்பிரிவு 9 - காற்றுப்பை விரிவாக்கம்
உட்பிரிவு 10 - காற்றுத் திரை கண்ணாடி ∴ யன்னல் உடைப்பு
உட்பிரிவு 11 - மூன்றாம் நபர் ஆதனச்சேதம்
உட்பிரிவு 12 - தனிப்பட்ட விபத்து அனுகூலங்கள்
உட்பிரிவு 13 - பிரயாணிகள் மீதான இடர்கள் (வர்த்தக வாகனங்களுக்கு மட்டும்)
உட்பிரிவு 14 - விலக்களிக்கப்பட்டவைகள் (வாடகை வாகனங்கள் மட்டும்)
உட்பிரிவு 15 - வாடகை வாகனங்கள் (வாடகைக்கு எடுத்தவர் செலுத்துதல்)
உட்பிரிவு 16 - நகர்த்தலில் உள்ள பொருட்கள் (அபாயகரமற்ற)

உட்பிரிவு 17 - நகர்த்தலில் உள்ள பொருட்கள் (அபாயகரமான)
உட்பிரிவு 18 - நகர்த்தலில் உள்ள பொருட்கள் - பயங்கரவாத காப்பீடு
உட்பிரிவு 19 - பாதை வழி அனுமதியுடனான சொகுசு பஸ்கள்
உட்பிரிவு 20 - உதிரிப் பாகங்கள் திருட்டுக் காப்பீடு (தனியார் இரட்டை உபயோக வாகனங்கள் மட்டும்)
உட்பிரிவு 21 - பயில்பாகன் ∴ ஓட்டுனர்
உட்பிரிவு 22 - வாடகை கொள்வனவு ∴ குத்தகை
உட்பிரிவு 23 - ஓட்டுனர் பயிற்றுவிப்பு நிலையம்
உட்பிரிவு 24 - நிறுவன கடன்கள்
உட்பிரிவு 25 - தன்னிச்சையான அதிகரிப்பு (அனைத்து கோரிக்கைகளும்)
உட்பிரிவு 26 - கட்டாய அதிகரிப்பு
உட்பிரிவு 27 - வரி விலக்களிப்பு வாகனங்கள்

# மோட்டார் வாகன காப்புறுதி பூட்கை

இதனகத்து அட்டவணையில் இவ்வுடன்படிக்கைக்கு அடிப்படையான முன்மொழிவு அல்லது அறிவித்தல் ஒன்றின் மூலம் காப்புறுதிதாரர் என விபரிக்கப்படுபவர், (இதனகத்துபின்னர் ‘‘காப்புறுதிதாரர்” என அழைக்கப்படுவார்)

## LOLC ஜெனரல இன்ஸூரன்ஸ் கம்பனியுடன்

(இதனகத்துபின்னர் “கம்பனி” என அழைக்கப்படும்)

அட்டவணையில் குறிப்பிடப்பட்ட அல்லது இப்பூட்கையினை மீளப்புதுப்பிப்பதற்கான கொடுப்பனவினை கம்பனி ஏற்கத்தகு ஏதேனும் காலப்பகுதியின் போது அல்லது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட “காப்பீட்டுக் காலப்பகுதியில்” ஏற்படும் விபத்து, இழப்பு, அல்லது சேதம் என்பவற்றிற்கான அத்தகைய காப்புறுதியானது கருத்திலெடுக்க்கப்பட மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தவனைப்பணத்தினை செலுத்திய அல்லது செலுத்துவதற்கு உடன்பட்டிருப்பத்துடன், கம்பனியுடன் கூட்டிணைந்துள்ளதாகவும் கொள்ளப்படுகின்றது.

***இக்காப்புறுதி பூட்கையானது :***

தன்னகத்தே கொண்டுள்ள அல்லது ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள அல்லது இதனகத்து வெளிப்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகள், விலக்களிப்புக்கள் மற்றும் நிபந்தனைகள் ஆகியனவற்றிற்கு அமைவானதாகும் என்பதற்கு சான்றாகின்றது.

**பிரிவு 1:**

**வாகனத்தின் மீதான சேதம் அல்லது வாகனத்தின் இழப்பு**

1. கம்பனியானது அட்டவணையில்(களில்) விபரிக்கப்பட்டுள்ள விதத்தில் ஏதேனும் மோட்டார் வாகனத்திற்கும் மற்றும் அல்லது அவ்வாகனத்தின் உருப்படிகள் அல்லது உதிரிப்பாகங்களுக்கு ஏற்படும் இழப்பிற்கு அல்லது பின்வரும் வழிகளில் அவற்றிற்கு ஏற்படும் சேதத்திற்கு எதிராக நட்ட ஈட்டினை கம்பனி செலுத்தும்.

I. தற்செயலான புறக்காரணிகள் மூலம்

II. தீ, வெளியக வெடிப்புகள், சுய பற்றவைப்பு, மின்னல் தாக்குதல், கொள்ளை, வீடுடைப்பு அல்லது திருட்டு முதலான காரணிகளின் மூலம்

III. தீங்கிழைக்கக்கூடிய நடவடிக்கைகள் மூலம்

IV. வீதி, தண்டவாளம், உள்நாட்டு நீர்வழி, பாரம் தூக்கி அல்லது மின் உயர்த்தி மூலமான நகர்தலில் உள்ள போது.

**பின்வருவன விலக்கப்படுகின்றன;**

i. a) குறித்த வாகனமானது வேறு ஏதேனும் சேதங்களுக்கு உட்பட்டாலேயொழிய டயர்கள், டியூப்கள், இன்ஜின் பாகங்கள் மற்றும் இறப்பர் பொருட்கள் ஆகியவற்றிற்கு ஏற்படும் சேதங்கள் விலக்கப்படும் அதேவேளை அத்தகைய நிகழ்வில் டயர்கள், டியூப்கள், இன்ஜின் பாகங்கள் மற்றும் இறப்பர் பொருட்கள் ஆகியவற்றிற்கு ஏற்படும் சேதங்கள் போன்றன தொடர்பில் கம்பனியின் பொறுப்புடைமையானது அத்தகைய உருப்படிகளை மீள இடுவதற்கான செலவில் நூற்றிற்கு 50% இனை விஞ்சாது.

b) ஒட்டுப்பசை, முத்திரை குத்தப்பயன்படும் மெழுகு மற்றும் அனைத்து மேற்பாகங்கள் மற்றும் கிழித்தற் கூறுகள் ஆகியன தொடர்பில் கம்பனியின் பொறுப்புடைமையானது அவற்றை மீள இடுவதற்கான செலவில் நூற்றிற்கு 50 இனை விஞ்சாது.

ii. தனியார் கார்கள் விடயத்தில் தவிர, அந்நேரத்தில் குறித்த வாகனம் கொள்ளை/ திருடப்பட்டாலேயன்றி பாகங்கள், உதிரிப்பாகங்கள் அல்லது உள்ளக பாகங்களானவை கொள்ளை, வீடுடைப்பு அல்லது திருட்டின் மூலம் இழக்கப்படல் அல்லது அவற்றிக்கு சேதம் ஏற்படல்.

iii. இடுவதற்கான செலவில் நூற்றிற்கு 50 இனை விஞ்சாது.

iv. பஸ்கள், சொகுசு பஸ்கள் மற்றும் மோட்டார் பெட்டிகள் எனப்பதியப்பட்டுள்ள வாகனங்கள் மீதுள்ள காற்றுத் திரைக் கண்ணாடி மற்றும் யன்னல்களின் இழப்பு அல்லது அவற்றிற்கு ஏற்படும் சேதங்கள் என்பன காப்புறுதிதாரரால் மதிப்பீடு செய்யப்பட்ட (துணைக்கருவிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் உள்ளடங்களாக) அத்தகைய வாகனத்தின் பெறுமதி குறித்த மோட்டார் வாகனத்தின் பெறுமதி (துணைக்கருவிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் உள்ளடங்களாக) ஆகிய பெறுமதிகளில் எது குறைவானதோ அப்பெறுமதியில் நூற்றிற்கு 10 வீதம் அதிகமாகும்

v. வாடகைக்கு வழங்கும் நோக்கத்திற்காக காப்புறுதி செய்யப்பட்டுள்ள அனைத்து வாகனங்களிலுமுள்ள விளக்குகள், டயர்கள் ,சக்கர மட்பட்டை, இடையகங்கள், இடையகக் கவர்கள், இடையகத் தாங்கிகள் மற்றும் அல்லது பூச்சு வேலைகள் ஆகியவற்றின் இழப்பு அல்லது அவற்றிற்கு ஏற்படும் சேதம்.

2. தனியார் கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் விடயத்தில் பொறிமுறை அல்லது இலத்திரனியல் பழுது, செயலிழப்பு அல்லது நிலைமுறிவுகளின் காரணமாக ஏற்படும் விளைவான இழப்புக்கள், பெருமானத்தேய்வு, தேய்வு மற்றும் சேதாரம் ஆகியவற்றிகாக எந்தவொரு கொடுப்பனவினையும் மேற்கொள்ள கம்பனி பொறுப்புடையதாகாது.

தனியார் கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் விடயத்தில் தவிர்த்து அனைத்து வாகனங்கள் தொடர்பிலும் அதிக சுமை அல்லதுஅழுத்தம் அல்லது சுமையின் தன்மை காரணமாக ஏற்படும் ஏதேனும் பாதிப்புக்களை தவிர பொறிமுறை அல்லது இலத்திரனியல் பழுது, செயலிழப்பு அல்லது நிலைமுறிவுகளின் காரணமாக ஏற்படும் விளைவான இழப்புக்கள், பெருமானத்தேய்வு, தேய்வு மற்றும் சேதாரம் ஆகியவற்றிகாக எந்தவொரு கொடுப்பனவினையும் மேற்கொள்ள கம்பனி பொறுப்புடையதாகாது

3. காப்புறுதிதாரர் ஏற்படும் ஒவ்வொரு நிகழ்வு தொடர்பிலும் கீழே கூறப்படும் ஏதேனும் செலவினத்திற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு பொறுப்புடையவராவார் (அல்லது ஏற்படும் ஏதேனும் குறைந்த செலவிற்கு). செலவானது கம்பனியினால் ஏற்படுமிடத்து கம்பனியானது அத்தொகையினை காப்புறுதிதாரருக்கு இதன்கீழ் பொறுப்பாக்கப்பட்டுள்ள தொகையில் உள்ளடக்கப்படும் என்பதுடன் அத்தொகையானது காப்புறுதிதாரரால் கம்பனிக்கு உடனடியாக மீளச் செலுத்தப்படல் வேண்டும். இவ் உபபிரிவின் நோக்கத்திற்காக வெளிப்படுத்தள்ளப்பட்டுள்ள நிகழ்வுகளானவை, இப்பிரிவின் கீழ் முன் காப்பீடு வழங்கப்பட்டுள்ள விடயத்தில் ஏதேனும் ஒரு வாகனத்துடன் தொடர்புபட்டு குறித்த ஒரு விடயத்திலிருந்து எழும் ஒரு நிகழ்வு அல்லது நிகழ்வுகளில் கோவை ஆகும்.

- தனியார் கார்கள் - இல்லை
- மோட்டார் சைக்கிள்கள் - முதலாவது ரூபா. 2000/-

  அதன் பின்னரான ஏதேனும் காப்பீட்டுக் காலத்தின் போது ரூ. 4000/-
- கூலிக்கமர்த்தும் அனைத்து வாகனங்களுக்கும் (All hiring vehicles) - முதலாவது ரூபா. 1000/-
- அனைத்து வாடகை வாகனங்களுக்கும் (All rental vehicles) - முதலாவது ரூபா. 5000/-

- வாடகை மோட்டார் சைக்கிள்கள் அனைத்தும் :- முதலாவது ரூபா. 2000/-

- வாகனங்களின் வயது மீதான கட்டாய அதிகரிப்புகள்
  a) 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டது ரூபா. 2500/-
  b) 15 ஆண்டுகளுக்கு மேற்பட்டது ரூபா. 5000/-
  c) 20 ஆண்டுகளுக்கு மேற்பட்டது ரூபா. 7500/-

4. குறித்த மோட்டார் வாகனமானது இக்காப்புறுதியின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ள காரணிகளின் மூலம் இழப்பு அல்லது சேதத்தின் உட்படுமாயின் பாதுகாப்பு மற்றும் மிக நெருங்கிய பழுதுபார்த்தலுக்கான அகற்றல் போன்றவற்றிற்கெனகம்பனியினால் அனுமதிக்கப்பட்டுள்ள நியாயமான செலவொன்றினை கம்பனி பொறுப்பேற்று அதனை காப்புறுதிதாரருக்கு மீள வழங்கும். ஆயினும் இத்தொகையானது மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா. இனையும் ஏனைய வாகனகளுக்கு ரூபா. இனையும் அல்லது ஏதேனும் விபத்தொன்றின் பொருட்டு காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு ஏதேனும் தொகையினையும் விஞ்சுதல் ஆகாது.

5. அ) இக்காப்புறுதியின் கீழ் கம்பனி பொறுப்பேற்கத்தகு விடயமொன்றில் குறித்த மோட்டார் வாகனமானது சேதமுறின், வாகனத்தின் முறையான அடையாளப்படுத்தலுடன் எழுத்திலான அறிவித்தலொன்று கம்பனிக்கு உடனடியாக வழங்கப்படல் வேண்டும் என்பதுடன் வாகனத்தின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படலோ அல்லது வாகனத்தின் எந்தவொரு பாகமும் கலைக்கப்படலோ கூடாது. அத்துடன் கம்பனியின் எழுத்து மூலமான முன்னனுமதியின்றி காப்புறுதிதாரர் குறித்த மோட்டார் வாகனத்தினை திருத்துவதற்கான செலவின மதிப்பீட்டினை பெற்றுக்கொள்ளல் ஆகாது.

ஆ) இவ் உப பிரிவின் நோக்கத்திற்காக, சேதமுற்ற வாகனத்தின் முறையான அடையாளப்படுத்தலினை வழங்குவது என்பது, வாகனத்தின் பதிவு இலக்கம் மற்றும் / அல்லது வாகனத்தின் அடிச்சட்ட இலக்கத்தினை வழங்குதல் ஆகும்.

## மிகை ஆதாயம் கோரப்பட முடியாது (No Claim Bonus -NCB)

காப்புறுதி ஒப்பந்தத்தினை புதிப்பிப்பதற்கு முன்னரான கீழே குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியொன்றில் இக்காப்புறுதியின் கீழ் மிகை ஆதாயத்தினைக் கோர முடியாத சந்தர்ப்பமொன்று உருவாகுமிடத்து ∴ எழுமிடத்து காப்புறுதி ஒப்பந்தத்தின் அத்தகைய பாகத்திற்கான தவணைப்பனமாணது அது புதுப்பிக்கப்பட்டதும் பின்வருமாறு குறைக்கப்படும்:

| | மோட்டார் சைக்கிள்களுக்கானது | ஏனைய அனைத்து வாகனகளுக்குமானது |
|---|---|---|
| 1வது புதுப்பிப்பு | 15 மூ | 20 மூ |
| 2வது புதுப்பிப்பு | 20 மூ | 30 மூ |
| 3வது புதுப்பிப்பு | 25 மூ | 40 மூ |
| 4வது புதுப்பிப்பு | 30 மூ | 50 மூ |
| 5வது புதுப்பிப்பு | 35 மூ | 60 மூ |
| 6வது புதுப்பிப்பு | | 70 மூ |
| 7வது புதுப்பிப்பு | | 75 மூ |

01. ஏதேனும் ஒரு ஆண்டின் 2 விபத்துக்களுக்குப் பிறகு ஊேடீ ஆனது ஒரு ஆண்டு (1) பின்னோக்கி நகர்த்தப்படும்.

02. 3வது விபத்திலிருந்து ஊேடீ ஆனது இரண்டு ஆண்டுகள் (2) பின்னோக்கி நகர்த்தப்படும்.

கம்பனியானது இக்காப்புறுதியில் வட்டியினை மாற்றீடு செய்வதற்கு கருத்தின் வட்டியானது மாற்றீடு செய்பவரிடம் இருக்கும் காலப்பகுதியில் மாற்றீடு செய்யப்படுபவருக்கான அனுகூலத்தினைப் அடையாது.

இக்காப்புறுதி பூட்கையின் அட்டவணையில்(களில்) ஒன்றிற்கு மேற்பட்ட மோட்டார் வாகனங்கள் விபரிக்கப்பட்டிருப்பின் அத்தகைய ஒவ்வொரு மோட்டார் வாகனத்திற்கும் தனித்தனியான காப்புறுதிகள் வழங்கப்பட்டிருப்பதைப் போன்று ஊேடீ யானது பிரயோகிக்கப்படும்.

## பிரிவு 2:

## மூன்றாம் நபர்களுக்கான சட்டமுறை பொறுப்பு

### யு. தனியார் கார்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்

1. இக்காப்புறுதி பூட்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் வரையறைகளுக்கு அமைவாக அட்டவணையில்.'.களில் விபரிக்கப்பட்டுள்ள ஏதேனும் மோட்டார் காரினால் ஏற்பட்ட அல்லது அதன் மூலம் விழைந்த அல்லது அதனுடன் தொடர்புறும் விபத்தொன்று நிகழும் சந்தர்ப்பத்தில் கோரிக்கைச் செலவுகள் உட்பட காப்புறுதிதாரர் சட்டமுறையாக செலுத்த வேண்டிய அனைத்து தொகைகளுக்குமான இழப்பீட்டினை கம்பனியானது பின்வரும் சந்தர்ப்பங்களில் காப்புறுதிதாரருக்கு கொடுப்பனவு செய்யும்:

   a) எவரேனும் நபர் ஒருவருக்கு அவரின் தொழில் நடவடிக்கையின் போது காப்புறுதிதாரரால் ஏற்படுத்தப்படும் மரணம் அல்லது உடற்காயம் என்பவற்றினைத் தவிர்த்து வேறு வகையில் காப்புறுதிதாரரால் மரணம் அல்லது உடற்காயம் ஏற்படுத்தப்படும் போது. இதில் காப்புறுதிதாரரின் வீட்டு உறுப்பினராக இருக்கும் ஒரு நபர் குறித்த மோட்டார் காரில் பிரயாணியாக இருப்பின் அவர் மீதான பொறுப்பு விலக்கப்படுகின்றது.

   b) காப்புறுதிதாரருக்கு அல்லது அவரது வீட்டிலுள்ள எவரேனும் உறுப்பினர் ஒருவருக்கு உரிமையாகவுள்ள அல்லது நம்பிக்கை பொறுப்பின் அடிப்படையில் அவரது உடைமையிலுள்ள அல்லது அவரது காவலில் அல்லது கட்டுப்பாட்டிலுள்ள ஆதனத்தினைத் தவிர்த்து ஏனைய ஆதனங்களுக்கு சேதம் ஏற்படுத்தப்படும் போது. .

2. கம்பனியானது ஏற்படக்கூடிய அனைத்து செலவினங்களையும் அதன் எழுத்து மூல சம்மதத்துடன் செலுத்தும்

3. காப்புறுதிதாரருக்கு இப்பிரிவினால் வழங்கப்படும் காப்பீட்டு விதிமுறைகளுக்கும் வரையறைகளுக்கும் அமைவாக கம்பனியானது குறித்த மோட்டார் காரினை செலுத்தும் எவரேனும் அத்தகைய நபருக்கு நட்டஈடு வழங்கும். அந்நபரானவர்:

   a) வேறு ஏதேனும் காப்புறுதியின் கீழ் இழப்பீட்டினைப் பெறுவதற்கு உரித்துடையவராக மாட்டார்.

   b) இக்காப்புறுதியின் விதிமுறைகள், விலக்களிப்புக்கள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றிற்கு அமைவாக அவை பிரயோகிக்கப்படும் வரையில் அவரே காப்புறுதிதாரராக நோக்கப்படுவார்.

4. இப்பிரிவில் வழங்கப்பட்டுள்ள காப்பீட்டு விதிமுறைகளுக்கும் வரையறைகளுக்கும் அமைவாக அட்டவணையில்(களில்) விபரிக்கப்பட்டுள்ள ஏதேனும் மோட்டார் காருடன் தொடர்புபடுமிடத்து காப்புறுதிதாரர் அவருக்கு உரிமையில்லாத அத்துடன் அவர் பொருட்டு வாடகைக் கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழ் வாடகைக்கு எடுக்கப்படாத தனியார் மோட்டார் காரொன்றினை (மோட்டார் சைக்கிள் அல்ல) பிரத்தியேகமாக செலுத்துவதால் ஏற்படும் இழப்புக்களுக்கு கம்பனியானது நட்டஈடு செலுத்தும். (நிறுவனங்களினால் காப்புறுதி செய்யப்பட்ட வாகனங்களுக்கு இது பிரயோகிக்கப்படாது)

5. இப்பிரிவின் கீழ் நட்ட ஈட்டிற்கு உரித்துடைய எவரேனும் நபரொருவருவர் இறக்குமிடத்து அத்தகைய நபர் மூலம் ஏற்படும் பொறுப்பிற்கு கம்பனியானது இப்பிரிவின் விதிமுறைகள் மற்றும் வரையறைகளுக்கு அமைவாக அவரின் தனிப்பட்ட பிரதிநிதிகளுக்கு நட்ட ஈட்டினை வழங்கும் அத்தகைய தனிப்பட்ட பிரதிநிதிகளே இக்காப்புறுதியின் விதிமுறைகள், விலக்களிப்புக்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் அவை பிரயோகிக்கப்படக்கூடிய வரையிலும் காப்புறுதிதாரராக கருதப்படுவர்.

6. கம்பனியானது இப்பிரிவின் கீழ் இழப்பீட்டிற்கான விடயமாக அமையத்தகு ஏதேனும் இறப்பொன்று தொடர்பில் விசாரிக்க அல்லது மரண விசாரணை மேற்கொள்ள தனது சுய தெரிவில் பிரதிநிதியை ஒழுங்கு செய்ய முடியும் என்பதுடன் இப்பிரிவின் கீழ் நட்ட ஈட்டுக்கு அமைவான ஏதேனும் நிகழ்வின் விளைவாக அல்லது அது தொடர்பில் எழும் ஏதேனும் செயல் அல்லது சாட்டப்பட்ட குற்றத்திகாக எதேனும் நீதவான் நீதிமன்றமொன்றில் அல்லது முதனிலை நீதிமன்றமொன்றில் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம்.

**பொறுப்புடைமையின் வரையறைகள்**

**தனிப்பட்ட கார்கள்**

பிரிவு 2 (யு) இன் கீழான கம்பனியின் பொறுப்புடைமையினது வரையறை
1. (ய) வரையறையற்றது.

பிரிவு 2 (யு) இன் கீழான கம்பனியின் பொறுப்புடைமையினது வரையறை
2. (டி) வரையறையற்றது.

ஒரு நிகழ்விலிருந்து எழும் ஒரு கோரிக்கை அல்லது தொடரான பல கோரிக்கைகள் தொடர்பில்

## 2. மோட்டார் சைக்கிள்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்

1. இக்காப்புறுதி பூட்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் வரையறைகளுக்கு அமைவாக அட்டவணையில்ஃகளில் விபரிக்கப்பட்டுள்ள ஏதேனும் மோட்டார் சைக்கிளினால் ஏற்பட்ட அல்லது அதன் மூலம் விழைந்த அல்லது அதனுடன் தொடர்புறும் விபத்தொன்று நிகழும் சந்தர்ப்பத்தில் கோரிக்கைச் செலவுகள் உட்பட காப்புறுதிதாரர் சட்டமுறையாக செலுத்த வேண்டிய அனைத்து தொகைகளுக்குமான இழப்பீட்டினை கம்பனியானது பின்வரும் சந்தர்ப்பங்களில் காப்புறுதிதாரருக்கு கொடுப்பனவு செய்யும்:

   a) எவரேனும் நபர் ஒருவருக்கு அவரின் தொழில் நடவடிக்கையின் போது காப்புறுதிதாரரால் ஏற்படுத்தப்படும் மரணம் அல்லது உடற்காயம் என்பவற்றினைத் தவிர்த்து வேறு வகையில் காப்புறுதிதாரரால் மரணம் அல்லது உடற்காயம் ஏற்படுத்தப்படும் போது.. இங்கு குறித்த மோட்டார் சைக்கிளில் அல்லது அதன் மீது பிரயாணித்த எவரேனும் நபர் மீதான பொறுப்புடைமை விலக்கப்படுகின்றது.

   b) காப்புறுதிதாரருக்கு அல்லது அவரது வீட்டிலுள்ள எவரேனும் உறுப்பினர் ஒருவருக்கு உரிமையாகவுள்ள அல்லது நம்பிக்கை பொறுப்பின் அடிப்படையில் அவரது உடைமையிலுள்ள அல்லது அவரது காவலில் அல்லது கட்டுப்பாட்டிலுள்ள ஆதனத்தையும் குறித்த மோட்டார் சைக்கிளில் கொண்டு செல்லப்பட்டவைகளையும் தவிர்த்து ஏனைய ஆதனங்களுக்கு சேதம் ஏற்படுத்தப்படும் போது.

அத்தகைய மோட்டார் சைக்கிளின் மீது சுமையேற்றுதல் அல்லது அதிலிருந்து சுமையை இறக்கிய பின்பு அவற்றினை அங்கிருந்து அகற்றுதல் தொடர்பில் வாகனப்பாதை அல்லது பொதுவழிபாதை எல்லைகளுக்கு அப்பால் எழும் அல்லது ஏற்படுத்தப்படும் மரணம், உடற்காயம் அல்லது சேதத்திற்கு கம்பனி பொறுப்பாகாது.

2. கம்பனியானது ஏற்படக்கூடிய அனைத்து செலவினங்களையும் அதன் எழுத்து மூல சம்மதத்துடன் செலுத்தும்.

3. காப்புறுதிதாரருக்கு இப்பிரிவினால் வழங்கப்படும் காப்பீட்டு விதிமுறைகளுக்கும் வரையறைகளுக்கும் அமைவாக கம்பனியானது குறித்த மோட்டார் சைக்கிளினைச் செலுத்தும் எவரேனும் அத்தகைய நபருக்கு நட்டஈடு வழங்கும். அந்நபரானவர்:

   a) வேறு ஏதேனும் காப்புறுதியின் கீழ் இழப்பீட்டினைப் பெறுவதற்கு உரித்துடையவராக மாட்டார்.

   b) இக்காப்புறுதியின் விதிமுறைகள், விலக்களிப்புக்கள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றிற்கு அமைவாக அவை பிரயோகிக்கப்படும் வரையில் அவரே காப்புறுதிதாரராக நோக்கப்படுவார்.

4. இப்பிரிவின் கீழ் நட்ட ஈட்டிற்கு உரித்துடைய எவரேனும் நபரொருவருவர் இறக்குமிடத்து அத்தகைய நபர் மூலம் ஏற்படும் பொறுப்பிற்கு கம்பனியானது இப்பிரிவின் விதிமுறைகள் மற்றும் வரையறைகளுக்கு அமைவாக அவரின் தனிப்பட்ட பிரதிநிதிகளுக்கு நட்ட ஈட்டினை வழங்கும் அத்தகைய தனிப்பட்ட பிரதிநிதிகளே இக்காப்புறுதியின் விதிமுறைகள், விலக்களிப்புக்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் அவை பிரயோகிக்கப்படக்கூடிய வரையிலும் காப்புறுதிதாரராக கருதப்படுவர்.

5. கம்பனியானது இப்பிரிவின் கீழ் இழப்பீட்டிற்கான விடயமாக அமையத்தகு ஏதேனும் இறப்பொன்று தொடர்பில் விசாரிக்க அல்லது மரண விசாரணை மேற்கொள்ள தனது சுய தெரிவில் பிரதிநிதியை ஒழுங்கு செய்ய முடியும் என்பதுடன் இப்பிரிவின் கீழ் நட்ட ஈடுக்கு அமைவான ஏதேனும் நிகழ்வின் விளைவாக அல்லது அது தொடர்பில் எழும் ஏதேனும் செயல் அல்லது சாட்டப்பட்ட குற்றத்திகாக எதேனும் நீதவான் நீதிமன்றமொன்றில் அல்லது முதனிலை நீதிமன்றமொன்றில் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம்.

.

**பொறுப்புடைமையின் வரையறைகள்**
**மோட்டார் சைக்கிள்கள்**

பிரிவு 2 (ഥ) இன் கீழான கம்பனியின் பொறுப்புடைமையினது வரையறை
1. (ய) வரையறையற்றது.

பிரிவு 2 (ഥ) இன் கீழான கம்பனியின் பொறுப்புடைமையினது வரையறை
2. (டி) 15 000/-

ஒரு நிகழ்விலிருந்து எழும் ஒரு கோரிக்கை அல்லது தொடரான பல கோரிக்கைகள் தொடர்பில்

## C. தனிப்பட்ட கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றினைத் தவிர்த்து ஏனைய வாகனங்கள் அனைத்திற்கும் ஏற்புடையதாகும்

1) (ை) இக்காப்புறுதி பூட்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் வரையறைகளுக்கு அமைவாக விபத்தொன்று நிகழும் சந்தர்ப்பத்தில் கோரிக்கைச் செலவுகள் உட்பட காப்புறுதிதாரர் சட்டமுறையாக செலுத்த வேண்டிய அனைத்து தொகைகளுக்குமான இழப்பீட்டினை கம்பனியானது பின்வரும் சந்தர்ப்பங்களில் காப்புறுதிதாரருக்கு கொடுப்பனவு செய்யும்:

a. அட்டவணையில்/களில் விபரிக்கப்பட்டுள்ள ஏதேனும் வாகனத்தினால் அல்லது அவ்வாகனத்தின் பயன்பாட்டினால் எவரேனும் நபர் ஒருவருக்கு மரணம் அல்லது உடற்காயம் ஏற்படுத்தப்படல்; (அவ்வாகனத்தில் சுமையற்றல் மற்றும் / அல்லது சுமையிறக்கல் உள்ளடங்களாக)

b. அட்டவணையில்/களில் விபரிக்கப்பட்டுள்ள வாகனங்களினால் பயன்பாட்டினால் ஆதனங்களுக்கு ஏற்படுத்தப்படும் சேதம். (அவ்வகனத்தில் சுமையற்றல் மற்றும் / அல்லது சுமையிறக்கல் உள்ளடங்களாக).

(ை) பின்வருவன தொடர்பில் கம்பனி எப்போதும் பொறுப்பாகாது:

a. அத்தகைய மோட்டார் வாகனத்தின் மீது சுமையேற்றுதல் அல்லது அதிலிருந்து சுமையை இறக்கிய பின்பு அவற்றினை அங்கிருந்து அகற்றுதல் தொடர்பில் வாகனப்பாதை அல்லது பொதுவழிபாதை எல்லைகளுக்கு அப்பால் எழும் அல்லது ஏற்படுத்தப்படும் மரணம், உடற்காயம் அல்லது சேதம்

b. காப்புறுதிதாரரரின் தொழில் நடவடிக்கையின் போது எவரேனும் நபர் ஒருவருக்கு ஏற்படுத்தப்படும் மரணம் அல்லது உடற்காயம்˙

c. ஏதேனும் கோரிக்கைகள் எழத்தக்க நிகழ்வொன்று நிகழும் நேரத்தில் (தொழில்முறை ஒப்பந்தமொன்றின் காரணமாக அல்லது அதன் நிமித்தம் பிரயாணிக்கும் நபரைத் தவிர) அத்தகைய வாகனத்தினுள் அல்லது அதன் மீது பிரயாணிக்கின்ற எவரேனும் நபருக்கு அல்லது அத்தகைய வாகனத்தினுள் நுழைகின்ற அல்லது அதன் மீது ஏறுகின்ற அல்லது வாகனத்திலிருந்து இறங்குகின்ற எவரேனும் நபர் ஒருவருக்கு ஏற்படுத்தப்படுகின்ற மரணம் அல்லது உடற்காயம்

d. காப்புறுதிதாரருக்கு அல்லது அவரது வீட்டிலுள்ள எவரேனும் உறுப்பினர் ஒருவருக்கு உரிமையாகவுள்ள அல்லது நம்பிக்கை பொறுப்பின் அடிப்படையில் அவரது உடைமையிலுள்ள அல்லது அவரது காவலில் அல்லது கட்டுப்பாட்டிலுள்ள ஆதனத் திற்கு அல்லது குறித்த வாகனத்தின் மூலம் நகர்த்தப்பட்ட ஆதனத்திற்கு ஏற்படுத்தப்படும் சேதம்˙

e. பாலத்திற்கு மற்றும் ∴ அல்லது பார எடைப்பொறிக்கு மற்றும் ∴ அல்லது மேம்பாலத்திற்கு மற்றும் ∴ அல்லது ஏதேனும் பாதை மற்றும் ∴ அல்லது குறித்த வாகனத்தின் பாரத்தினால் அடிப்பாகத்தில் அதிர்வினை ஏற்படுத்தும் ஏதேனும் மற்றும் ∴ அல்லது அத்தகைய வாகனத்தின் மூலம் கொண்டுசெல்லப்படும் ஏதேனும் சுமையின் மூலம் ஏற்படுத்தப்படும் சேதம்˙

f. குறித்த வாகனத்தின் புகை அல்லது சாம்பல் மூலம் அல்லது அத்தகைய வாகனத்தின் கொதிகலன் வெடிப்பதால் ஆதனத்திற்கு ஏற்படுத்தப்படும் சேதம்˙

g. இதனகத்துள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நெடுஞ்சாலை மீதுள்ள குறித்த வாகனத்தின் பயன்பாட்டினால் ஏற்பட்ட மரணம் அல்லது காயமாக அல்லாது குறித்த வாகனத்தின் கொதிகலன் வெடிப்பதனால் ஏற்படுத்தப்பட்ட மரணம் அல்லது உடற்காயம்˙

2. கம்பனியானது ஏற்படக்கூடிய அனைத்து செலவினங்களையும் அதன் எழுத்து மூல சம்மதத்துடன் செலுத்தும்.

3. காப்புறுதிதாரருக்கு இப்பிரிவினால் வழங்கப்படும் காப்பீட்டு விதிமுறைகளுக்கும் வரையறைகளுக்கும் அமைவாக கம்பனியானது குறித்த மோட்டார் சைக்கிளினைச் செலுத்தும் எவரேனும் அத்தகைய நபருக்கு நட்டஈடு வழங்கும். அந்நபரானவர்:

a) வேறு ஏதேனும் காப்புறுதியின் கீழ் இழப்பீட்டினைப் பெறுவதற்கு உரித்துடையவராக மாட்டார்.

b) இக்காப்புறுதியின் விதிமுறைகள், விலக்களிப்புக்கள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றிற்கு அமைவாக அவை பிரயோகிக்கப்படும் வரையில் அவரே காப்புறுதிதாரராக நோக்கப்படுவார்.

4. இப்பிரிவின் கீழ் நட்ட ஈட்டிற்கு உரித்துடைய எவரேனும் நபரொருவருவர் இறக்குமிடத்து அத்தகைய நபர் மூலம் ஏற்படும் பொறுப்பிற்கு கம்பனியானது இப்பிரிவின் விதிமுறைகள் மற்றும் வரையறைகளுக்கு அமைவாக அவரின் தனிப்பட்ட பிரதிநிதிகளுக்கு நட்டஈட்டினை வழங்கும் அத்தகைய தனிப்பட்ட பிரதிநிதிகளே இக்காப்புறுதியின் விதிமுறைகள், விலக்களிப்புக்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் அவை பிரயோகிக்கப்படக்கூடிய வரையிலும் காப்புறுதிதாரராக கருதப்படுவர்.

5. கம்பனியானது இப்பிரிவின் கீழ் இழப்பீட்டிற்கான விடயமாக அமையத்தகு ஏதேனும் இறப்பொன்று தொடர்பில் விசாரிக்க அல்லது மரண விசாரணை மேற்கொள்ள தனது சுய தெரிவில் பிரதிநிதியை ஒழுங்கு செய்ய முடியும் என்பதுடன் இப்பிரிவின் கீழ் நட்ட ஈட்டுக்கு அமைவான ஏதேனும் நிகழ்வின் விளைவாக அல்லது அது தொடர்பில் எழும் ஏதேனும் செயல் அல்லது சாட்டப்பட்ட குற்றத்திகாக எதேனும் நீதவான் நீதிமன்றமொன்றில் அல்லது முதனிலை நீதிமன்றமொன்றில் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம்.

**பொறுப்புடைமையின் வரையறைகள்**
**தனிப்பட்ட கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றினைத் தவிர்த்து ஏனைய வாகனகள்**

பிரிவு 2 (ஊ) இன் கீழான கம்பனியின் பொறுப்புடைமையினது வரையறை
1. (ய) வரையறையற்றது.

பிரிவு 2 (ஊ) இன் கீழான கம்பனியின் பொறுப்புடைமையினது வரையறை
2. (டி) 15 000.∴-

ஒரு நிகழ்விலிருந்து எழும் ஒரு கோரிக்கை அல்லது தொடரான பல கோரிக்கைகள் தொடர்பில்

## பிரிவு 2:
## மருத்துவ செலவுகள்
**(தனியார் கார்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்)**

கொடுப்பனவு செலுத்தப்பட்ட சாரதி மற்றும் ∴ அல்லது உதவியாளர் மற்றும் ∴ அல்லது துப்பரவாளர் ஆகியோரைத் தவிர குறித்த மோட்டார் காரினால் ஏற்படுத்தப்பட்ட விபத்தின் விளைவாக ஏற்பட்ட நேரடியான மற்றும் உடனடியான வன்முறை, தற்செயலான புற மற்றும் வெளிப்படையான காரணிகள் மூலம் காப்புறுதிதாரருக்கு அல்லது அட்டவணை∴களில் விபரிக்கப்பட்டுள்ள மோட்டார் காரினை கையாள்பவருக்கு ஏற்படுத்தப்படும் ஏதேனும் உடற்காயங்கள் தொடர்பில் உண்டாகும் நியாயமான மருத்துவ செலவுகளை கம்பனியானது காப்புறுதிதாரருக்கு கொடுப்பனவு செய்யும்.இவ் உட்பிரிவுன் கீழ் வழங்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விபத்து தொடர்பான கம்பனியின் மொத்த பொறுப்புடைமையானது ரூபா. 1500∴- இற்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

## குறித்த சில விதிமுறைகளின் தவிர்ப்பு மற்றும் மீட்கத்தகு உரிமை

இக்காப்புறுதியிலுள்ள எதுவும் அல்லது இதனகத்து உள்ள எந்த உட்பிரிவும் இக்காப்புறுதியின் மூலம் பயனடைகின்ற ஏதேனும் நபருடைய உரிமையினையோ அல்லது ஆம் ஆண்டு இலக்க மோட்டார் போக்குவரத்து (திருத்த) சட்டத்தின் மற்றும் ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகளின் மூலம் அல்லது அதன் கீழ் தொகையொன்றினை மீட்கத்தகு வேறு எவரேனும் ஒரு நபரின் உரிமையினையோ எந்தவகையிலும் பாதிக்காது.

ஆயினும் மேற்கூறப்பட்ட சட்ட ஏற்பாடுகளைத் தவிர, கம்பனியினால் செலுத்தப்பட்டதும், இக்காப்புறுதி பூட்கையின் கீழ் கம்பனி செலுத்துவதற்கு பொறுப்பாகாததுமான அனைத்து கொடுப்பனவுகளையும் காப்புறுதிதாரர் கம்பனிக்கு மீளச்செலுத்த வேண்டும்.

நட்டஈட்டுக்கான வரையறைகளின் பிரயோகம்

ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் நட்டஈட்டுக்கு உரித்தாகத்தக்க ஏதேனும் விபத்தொன்று நிகழும் போது இக்காப்புறுதி பூட்கையின் ஏதேனும் விதிமுறைகள் மற்றும் ∴ அல்லது இதனகத்துள்ள ஏதேனும் உட்பிரிவு மூலமான ஏதேனும் நட்டஈட்டுத் தொகைக்கான வரையறைகளுக்கு உட்பட்டு அனைத்து நபர்களுக்குமான நட்ட ஈட்டுக்காக காப்புறுதி செய்யப்பட்ட முழுத்தொகைக்கும் விண்ணப்பிக்க முடியும்.

# பொதுவான விலக்களிப்புக்கள்
## (அனைத்து வாகனங்களுக்கும் ஏற்புடையதாகும்)

இக்காப்புறுதிப் பூட்கையின் கீழ் பின்வருவன தொடர்பில் கம்பனி பொறுப்பாகாது:

1. இலங்கை நிலப்பரப்பின் எல்லைக்கு வெளியே இடம்பெற்ற அல்லது ஏற்பட்ட ஏதேனும் விபத்து, இழப்பு, சேதம் மற்றும் ∴ அல்லது பொறுப்புடைமை.

2. ஏதேனும் ஒப்பந்த பொறுப்பின் வழியாக எழும் ஏதேனும் கோரிக்கை

3. குறித்த வாகனமானது,
   a. இதனகத்துள்ள அட்டவணையில் □விலக்கப்பட்ட பாவனை” எனும் வரைவிலக்கணத்தினுள் உள்ளடங்கும் பயன்பாட்டிற்காக உபயோகிக்கப்பட்டிருத்தல் அல்லது

   b. குறிப்பிட்ட அட்டவையில் □விலக்கப்பட்ட ஓட்டுனர்” எனும் வரைவிலக்கணத்தினுள் உள்ளடங்கும் நபரால் அல்லது அதில் வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்காக ஓட்டப்பட்டிருத்தல்

   என்பனவற்றின் மூலம் ஏற்பட்ட ஏதேனும் விபத்து, இழப்பு, சேதம் மற்றும் ∴ அல்லது பொறுப்பு.

4. (சட்டத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகும் அவசியத்தினை தவிர்த்து) நேரடியாக அல்லது மறைமுகமாக, நெருக்கமாக அல்லது தொலைவாக நிகழ்ந்த அல்லது பங்களிப்பு செய்த அல்லது அறியப்படும் ஒன்றாக அல்லது பின்வருவனவற்றுடன் தொடர்புபட்டு எழும் ஏதேனும் விபத்து, இழப்பு, சேதம் மற்றும் ∴ அல்லது பொறுப்புடைமை:

   a. யுத்தம், ஆக்கிரமிப்பு, வெளிநாட்டு எதிரிகளின் செயல்கள், குரோதங்கள் அல்லது யுத்த நோக்குடைய நடவடிக்கைகள் (போர் பிரகடனம் செய்யப்பட்டிருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும்) உள்நாட்டு யுத்தங்கள், அதிகாரத்தை எதிர்த்தல், கலகம், இராணுவ அல்லது அதிகாரத்தைக் கையிலெடுத்தல்.

   b. வேலைநிறுத்தம், கலவரம் மற்றும் உள்நாட்டு குழப்பம்.

   c. தடுத்து வைத்தல், பறிமுதல் செய்தல், சுவீகரித்தல் அல்லது அச்சுறுத்தும் ஏதேனும் செயல்.
   d. வெள்ளம், கடும்புயல், சூறாவளி, புயல், கடுங்காற்று, புயல் காற்று, சுழல் காற்று, எரிமலை வெடிப்பு, நில அதிர்வு அல்லது ஏதேனும் இயற்கையின் சீற்றம் அல்லது வேறு ஏதேனும் சூழலியல் இடையூறுகள் அல்லது இத்தகைய நிகழ்வுகள் நேரடி விளைவாக ஏற்படும் வேறு ஏதேனும் நிகழ்வுகள்.

அத்துடன் இதன் கீழான ஏதேனும் நட்டஈட்டினைக் கோரும் நபர் ஏற்பட்ட விபத்து, இழப்பு, சேதம் அல்லது பொறுப்பு சுதந்திரமாக எழுந்தது என்றும் கூறப்பட்ட ஏதேனும் நிகழ்வுடனோ அல்லது அதன் பின்னரான விளைவுடனோ தொடர்புபட்ட அல்லது அதனால் இடம்பெற்ற அல்லது அதன் மூலம் பங்களிப்பு செய்யப்பட்ட அல்லது கண்டறியப்பட்ட நிகழ்வல்ல என்பதனை நிரூபிக்க வேண்டும் என்பதுடன் அத்தகைய நிரூபிப்பானது பொய்யானது என அறியப்படுமிடத்து அத்தகையதொரு கோரிக்கை தொடர்பில் எந்தவொரு கொடுப்பனவினையும் மேற்கொள்ள கம்பனி பொறுப்பாகாது.

5. 1951 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் 151 (1) ஆம் பிரிவினதும் அதன் திருத்தச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கும் அமைவாக இதனகத்துள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஏதேனும் மோட்டார்

வாகனமானது போதை ஏற்படுத்தும் மதுபானம் அல்லது வேறு ஏதேனும் போதைப்பொருளினை உட்கொண்டதன் பின்னர் காப்புறுதிதாரரால் அல்லது அவரின் கட்டளையின் அல்லது அனுமதியின் மீது வேறு நபரால் செலுத்தப்படுமிடத்து, அதனுடன் தொடர்புற்று அல்லது அதன் மூலம் நேரடியாக அல்லது மறைமுகமாக எழும் ஏதேனும் விபத்து, இழப்பு அல்லது சேதம்.

6. (ய) ஏதேனும் ஆதனத்திற்கு ஏற்படும் விபத்து, இழப்பு அல்லது சேதம் அல்லது ஏதேனும் நட்டம் அல்லது செலவினம் அல்லது அதன் மூலமான அல்லது அதன் விளைவான அல்லது அதன் பின்விளைவாக ஏற்படும் ஏதேனும் நட்டம்

(டி) ஏதேனுமொரு அணுசக்தி எரிபொருள் அல்லது அணுசக்தி எரிபொருள் எரிப்பு மூலமான ஏதேனும் அணுசக்திக் கழிவு அல்லது அயனியாக்க கதிரியக்கத்தினால் அல்லது கதிர்வீச்சின் மூலமான அசுத்தங்களால் அல்லது கதிரியக்கத்தின் மூலமான அசுத்தங்களின் தன்மையினால் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படும் அல்லது அதன் பங்களிப்பினால் விளையும் அல்லது அதன் மூலம் எழும் ஏதேனும் பொறுப்பு. இவ்விலக்களிப்பின் நோக்கத்திற்காக எரிப்பு என்பதனுள் சுயமாக நீடிக்கும் ஏதேனும் அணுக்கரு இணைவு செயன்முறையும் உள்ளடங்கும்.

## நிபந்தனைகள்

1) காப்புறுதி ஒப்பந்தம், அட்டவணை மற்றும் தற்போதுள்ள மோட்டார் காப்புறுதியின் சான்றிதழ் ஆகியன ஒரே உடன்படிக்கையாகவும் இதிலிருக்கும் ஏதேனும் பாகத்துடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட கருத்தினைத் தரும் ஏதேனும் சொல் அல்லது வெளிப்பாடாகவும் ஒன்றாக சேர்த்து வாசிக்கப்பட வேண்டும் அத்துடன் அது தோன்றும் அனைத்து இடங்களிலும் அக்குறிப்பிட்ட கருத்தினையே தாங்கி நிற்கும்.

2) (ய) ஏதேனும் விபத்து அல்லது இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டதன் மீது காப்புறுதி செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தின் முறையான அடையாளப்படுத்தலுடன் அது தொடர்பாக கம்பனியின் பத்திரம் வழங்கும் காரியாலயத்திற்கு எழுத்து மூலமான அறிவித்தல் உடனடியாக வழங்கப்படல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் கோரிக்கையோன்றின் போது கடிதங்கள், கோரிக்கை எழுத்தாணை, அழைப்பாணை மற்றும் ∴ அல்லது செயன்முறை என்பன காப்புறுதிதாரருக்கு கிடைக்கப்பெற்றதும் உடனடியாக கம்பனிக்கு அனுப்பப்படல் வேண்டும். இக்காப்புறுதி பூட்கையின் கீழ் நட்ட ஈட்டு கோரிக்கையொன்றினை மேற்கொள்ளத்தக்க ஏதேனும் நிகழ்வு இடம்பெறப்போவதாக காப்புறுதிதாரர் அறிந்திருந்தால் அது தொடர்பிலான அறிவித்தலும் கம்பனிக்கு எழுத்தில் வழங்கப்பட முடியும். இக்காப்புறுதி பூட்கையின் கீழ் கோரிக்கையின் விடையப்பொருளாகவிருக்கும் திருட்டு அல்லது வேறு ஏதேனும் குற்றவியல் நடவடிக்கையின் விடயத்தில் காப்புறுதிதாரர் உடனடியாக அறிவித்தலொன்றினை வழங்கும் அதேவேளை குற்றவாளிக்கு தண்டனைப் பெற்றுத்தர கம்பனிக்கு உதவி செய்தல்.

(டி) இவ் உட்பிரிவின் நோக்கத்திற்காக முறையான அடையாளப்படுத்தல் என்பது சேதமடைந்த வாகனத்தின் பதிவு இலக்கம் மற்றும் அல்லது அடிச்சட்ட இலக்கம் என்பவற்றினை வழங்குதல் ஆகும்.

3) (ய) கம்பனி மேற்கொள்வதற்கு உரித்துடைய ஒப்புதல் கொடைமுனைவு, சத்திய வாக்கு, கொடுப்பனவு அல்லது நட்ட ஈடு ஆகிய எதுவும் காப்புறுதிதாரரினால் அல்லது அவர் சார்பாக, கம்பனியின் எழுத்து மூலமான அனுமதியின்றி மேற்கொள்ளப்பட அல்லது வழங்கப்பட முடியாது. நட்ட ஈடு அல்லது சேதங்கள் அல்லது வேறு ஏதேனும் தொடர்பில் தனது சுய அனுகூலத்திற்காக கம்பனி அதனை மேற்கொள்வதற்கும் காப்புறுதிதாரரின் பெயரில் செயற்படுவதற்கும் விரும்பின், அது தொடர்பான ஏதேனும் செயன்முறைகளை கொண்டு நடாத்த அல்லது ஏதேனும் கோரிக்கை தொடர்பான கொடுப்பனவினை செலுத்த கம்பனிக்கு பூரண தற்றுணிவு உண்டு என்பதுடன் இதற்கென கம்பனி தேவைப்படுத்தும் அனைத்து தகவல்களையும் காப்புறுதிதாரர் வழங்கி உதவ வேண்டும்.

(டி) கோரிக்கையொன்று அல்லது தொடரான கோரிக்கைகள் பல எழுவதற்கு காரணமாகும் ஏதேனும் நிகழ்வு இடம்பெற்று முடிந்ததன் பின்னர் எந்நேரத்திலும் அது மோட்டார் சைக்கிளின் விடயத்திலாயின் பிரிவு 2(8) இன் உபபிரிவு 1(டி) இன் கீழ் அல்லது பிரிவு 2(உ) இன் உபபிரிவு 1(டி) இன் கீழும், தனிப்பட்ட கார் அல்லது மோட்டார் சைக்கிள் அல்லாத வேறு ஏதேனும் மோட்டார் வாகனத்தின் விடயத்திலாயின் கூறப்பட்ட உபபிரிவில் வழங்கப்பட்டுள்ள கம்பனியின் பொறுப்புடைமையின் கீழும் கம்பனியினால் காப்புறுதிதாரருக்கு முழுத்தொகையையும் கொடுப்பனவு செய்யப்பட முடியும் என்பதுடன் ஏதேனும் பாதுகாப்புக் கொடுப்பனைவை அல்லது அது தொடர்பான செயற்பாடுகளை கைவிடவும் முடியும். அத்துடன் அத்தகைய பாதுகாப்பு, கொடுப்பனவு அல்லது செயற்பாடுகளுடன் தொடர்புபடும் கம்பனியின் ஏதேனும் குறிப்பிடப்பட்ட செயல் அல்லது செய்யாமையின் விளைவாக காப்புறுதிதாரருக்கு ஏற்படுத்தப்பட்ட ஏதேனும் குறிப்பிடப்பட்ட சேதங்களுக்கோ அல்லது அத்தகைய செயற்பாடுகளை கம்பனி கைவிட்டதன் பின்னர் காப்புறுதிதாரரினால் அல்லது வேறு எவரேனும் உரிமைக் கோருபவரினால் அல்லது பிரிதொரு நபரினால் கம்பனியினால் கைவிடப்படுகின்ற அத்தகைய செயற்பாடுகள் விடயத்தில் ஏற்படுத்தப்படும் ஏதேனும் கிரயம் அல்லது செலவுகளுக்கோ அல்லது கம்பனி பொறுப்பாகாது. (தனிப்பட்ட கார்களுக்கு பிரயோகிக்கப்படாது.)

4) கம்பனியானது தனது சுய தெரிவில் இதனகத்துள்ள அட்டவணையில்∴களில் அல்லது பிரிவுகளில் விபரிக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனத்தினை மற்றும் ∴ அல்லது அதன் பாகங்களை அல்லது உதிரிப்பாகங்களை திருத்த, பழைய நிலைக்கு கொண்டு வர அல்லது மாற்றீடு செய்ய முடியும். அல்லது இழப்பு அல்லது சேதம் மற்றும் கம்பனியின் பொறுப்புடைமையொன்று ஏற்படுமிடத்து, அத்தகைய பாகங்களின் இழப்பு அல்லது சேதமானது அவற்றின் உண்மைப் பெறுமதியை விஞ்சாமலும், பொருத்தும் செலவானது நியாயமான பெறுமதியாகவும், அட்டவணையில்∴களில் குறிப்பிடப்பட்டதற்கு இணங்க (துணைக் கருவிகள் மற்றும் உதிரிப் பாகங்கள் உள்ளடங்களாக) மோட்டார் வாகனத்தின் மீதான காப்புறுதிதாரரின் பெறுமதி மதிப்பீட்டினை அல்லது இழப்பு அல்லது சேதம் இடம்பெறும் போதுள்ள (துணைக் கருவிகள் மற்றும் உதிரிப் பாகங்கள் உள்ளடங்களாக) மோட்டார் வாகனத்தின் பெறுமதியினை எந்தவகையிலும் மீறாமல் இருக்கும் போது, இவற்றுள் எது குறைந்ததோ அதனை கம்பனி காசாகச் செலுத்த முடியும். மோட்டார் வாகனத்திற்கு மற்றும் ∴ அல்லது அதன் துணைக் கருவிகளுக்கு இழப்பு அல்லது சேதம் ஏற்படுகையில் அதனை சரிசெய்வதர்காகன் பாகங்கள் இலங்கையில் உள்ள .சரக்கிருப்பிலிருந்து பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும் போது

அல்லது இழப்பு அல்லது சேதத்தினை காசாகச் செலுத்தும் தெரிவினை கம்பனி செயற்படுத்தும் போது ஏதேனும் பாகம் தொடர்பான கம்பனியின் பொறுப்புடைமையானது பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்படும்.

a. (ഠ) உற்பத்தியாளர்களினால் அல்லது அவர்களின் இலங்கையிலுள்ள முகவர்களினால் வழங்கப்பட்ட தற்போதைய விபர அட்டவணையில் அல்லது விலைப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விலை ; அல்லது
(ഠൈ) அவ்வாறான விபரப் அட்டவணை அல்லது விலைப் பட்டியல் எதுவும் நடைமுறையில் இல்லாத போது உற்பத்தியாளர்∴களிடமிருந்து பெறப்பட்ட விலைப்பட்டியலுடன் ஆகாய மார்க்கமாக இலங்கைக்கு கொண்டு வருவதற்கான போக்குவரத்திற்கான நியாயமான செலவு மற்றும் இறக்குமதி வரிப்பணம்,

அத்துடன்

b. அத்தகைய பாகத்தினை பொருத்துவதற்கான நியாயமான பணச் செலவு.

5) இதனகத்துள்ள அட்டவணையில்∴களில் விபரிக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனத்தினை இழப்பு அல்லது சேதத்திலிருந்து பாதுகாப்பதற்கும், நல்ல நிலையில் அதனை பேணுவதற்குமான நியாயமான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் காப்புறுதிதாரர் முன்னெடுக்க வேண்டும். அத்தகைய மோட்டார் வாகனத்தினையோ அல்லது அதன் பாகங்களையோ அல்லது காப்புறுதிதாரரின் சாரதி ∴ ஓட்டுனரையோ அல்லது அவரின் பணியாளரையோ எந்நேரத்திலும் அணுகி சோதனையிடுவதற்கு கம்பனிக்கு பூரண சுதந்திரம் உண்டு. ஏதேனும் விபத்து அல்லது செயலிழப்புக் கோளாறுகள் நிகழுமிடத்து அத்தகைய மோட்டார் வாகனத்திற்கு மேற்கொண்டு ஏற்படத்தக்க இழப்பு அல்லது சேதத்திலிருந்து பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய முறையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் குறித்த மோட்டார் வாகனமானது உதவியற்ற நிலையில் விடப்படக் கூடாது. அவசியமான பழுது பார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு முன் குறித்த மோட்டார் வாகனமானது செலுத்தப்பட்ட நிலையில் ஏதேனும் மேலதிக இழப்புக்கள் அல்லது சேதங்கள் ஏற்படுமிடத்து அவற்றிற்கான மேலதிக செலவினை காப்புறுதிதாரரே தனது சொந்த அபாயத்தில் முழுமையாக பொறுப்பேற்க வேண்டும்.

6) கம்பனியானது இறுதியாக அறியப்பட்ட காப்புறுதிதாரரின் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமான ஏழு நாட்கள் அறிவித்தலை வழங்கி இக்காப்புறுதி பூட்கையினை இரத்து செய்ய முடியும். இத்தகைய சந்தர்ப்பத்தில் காப்புறுதி பூட்கையானது வலுவிலிருந்த காலப்பகுதியில் காப்புறுதிதாரரால் செலுத்தப்பட்ட தவணைப்பணத்திற்கு அமைவாக குறிப்பிட்ட விகிதப்படியான தொகை அவருக்கு வழங்கப்படலாம் அல்லது ஏழு நாட்கள் அறிவித்தலின் மீது எந்நேரத்திலும் காப்புறுதிதாரரால் ஒப்பந்தமானது இரத்து செய்யப்படலாம் (அதன் பின்னரான தற்போதுள்ள காப்புறுதி காலத்தின் போது எழும் எந்தவொரு கோரிக்கைக்கும் நட்டஈடு வழங்கப்படாது). அத்துடன் காப்புறுதி ஒப்பந்தமானது நடைமுறையிலுள்ள காலத்தின் போது கம்பனியினுடைய குறுங்கால வீதங்களுக்கு அமைவாக தவணைப்பணமாது கழிக்கப்பட்ட பின்னரான தொகைக்கு காப்புறுதிதாரர் உரித்தாவார்.

## 7) (ய) மோட்டார் சைக்கிள்களைத் தவிர்த்து தனிப்பட்ட கார்களுக்கும் மற்றும் மோட்டார் வாகனங்களுக்கும் மாத்திரம் பிரயோகிக்கப்படும்

இக்காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் இழப்பு, சேதம் அல்லது பொறுப்புடைமைக்காக வேறு ஏதேனும் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழும் அதே விடயங்களுக்கென காப்பீடு செய்யப்பட்ட காப்புறுதியானது நடைமுறையில் உள்ள போது அது தொடர்பில் ஏதேனும் கோரிக்கைகள் எழுமிடத்து அதன் இழப்பு, சேதம், நட்டஈட்டுத் தொகை அல்லது செலவுகளின் தகவுப்பொருத்த வீதாசாரத்தினை விட அதிகமாக செலுத்த அல்லது பங்களிப்பு செய்ய கம்பனி பொறுப்பாகாது. இந்த நிபந்தனையில் அது மோட்டார் சைக்கிளின் விடயத்திலாயின் பிரிவு 2(யு) இன் உபபிரிவு 3(ய) இன் கீழ் அல்லது தனிப்பட்ட கார் அல்லது மோட்டார் சைக்கிள் அல்லாத வேறு ஏதேனும் மோட்டார் வாகனத்தின் விடயத்திலாயின் பிரிவு 2(ஊ) இன் உபபிரிவு 3(ய) இன் கீழும் எந்தவொன்றும் கம்பனியின் மீது எந்தவொரு பொறுப்புடைமையையும் சுமத்தாது

### (ܐ) மோட்டார் சைக்கிள்களுக்கு பிரயோகிக்கப்படும்

